# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2334/38 - 2023 ජුනි මස 01 වැනි බ්‍රහස්පතින්දා - 2023.06.01

2334/38 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு யூன் மாதம் 01 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: කොළඹ/ලේ/ඉඅත්/3/115/
අමාත්‍ය මණ්ඩල කාර්යාලය.
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சின் குறிப்பு
இல.: 4-3/13/2020/CO/172.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கொழும்பு பிரதேச செயலாளர் பிரிவில் கோட்டை கிராம அலுவலர் பிரிவில் கோட்டை (கொழும்பு மாநகர சபை எல்லையினுள்) கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தின் இல. 10026, 2022.12.30 ஆந் திகதிய ஆரம்ப வரைபடத்தில் துண்டு இல. 1 எனக் காட்டப்பட்ட 0.0845 ஹெக்டயார் விஸ்தீரணத்தைக் கொண்ட வரி மதிப்பீட்டு இல. 15, ஸ்ரீமத் பாரொன் ஜயதிலக மாவத்தையில் அமைந்துள்ள காணியின் விபரம்:

1. **துண்டு இல. 1**

வரி மதிப்பீடு இல.: 15; காணியின் பெயர்: வரி மதிப்பீட்டு இல. 15, ஸ்ரீமத் பாரொன் ஜயதிலக மாவத்தையில் அமைந்துள்ள காணி; விபரம்: வீட்டுத் தோட்டம் மற்றும் அடுக்குமாடி (தரைத் தளத்துடன்) கட்டடமும் உள்ளன; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: அரசு; விஸ்தீரணம்: 0.0845 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரிமை கோருகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில்



*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2023 ஆம் ஆண்டு யூன் மாதம் 20 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு கொழும்பு பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்படியும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2023 ஆம் ஆண்டு யூன் மாதம் 09 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.

நாலக்க ரத்நாயக்க,
காணி எடுத்தல் உத்தியோகத்தர்/
பிரதேச செயலாளர்

பிரதேச செயலகம்,
கொழும்பு,
2023, மார்ச்சு 31.
EOG 06 - 0002